# தினமலர்

■ சென்னை ■ சனி நவம்பர் 5 2011


# மெட்ரோ ரயில் பணிக்காக 'பிக்னிக்' ஓட்டல் இடிப்பு

சென்னை, நவ. 5-

மெட்ரோ ரயில் பணிக்காக, மாநகராட்சி அலுவலகம் அருகே உள்ள, 'பிக்னிக்' ஓட்டல் கட்டடத்தை இடிக்கும் பணி, முழுவீச்சில் நடந்து வருகிறது. கட்டடம் இடிக்கும் இடத்தில், மெட்ரோ சுரங்க ரயில் நிலையம் அமைகிறது.

சென்னை சென்ட்ரல் அருகே, பாரம்பரியம் மிக்க விக்டோரியா ஹால் உள்ளது. இந்த இடத்தையும், இதைச் சுற்றிய பகுதிகளையும், விக்டோரியா அறக்கட்டளைக்கு, 99 ஆண்டுகால குத்தகைக்கு, சென்னை மாநகராட்சி அளித்தது. இதில் 13.5 கிரவுண்ட் இடத்தை, பிக்னிக் ஓட்டலுக்கு இந்த அறக்கட்டளை, உள் குத்தகைக்கு வழங்கியது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, சென்னை மாநகராட்சி கோர்ட்டிற்குச் சென்றது. மாநகராட்சியின் இந்நடவடிக்கைக்கு எதிராக, ஓட்டல் நிர்வாகம் சுப்ரீம் கோர்ட் வரை சென்றது. மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை இரண்டு வாரத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமென, சுப்ரீம்கோர்ட் சமீபத்தில் உத்தரவிட்டது. இதனால் மாநகராட்சியின், 30 ஆண்டுகால




மெட்ரோ ரயில் திட்ட பணிக்காக, மாநகராட்சி அலுவலகம் அருகேயுள்ள பிக்னிக் ஓட்டலை இடிக்கும் பணி, முழு வீச்சில் நடக்கிறது.

போராட்டம் முடிவுக்கு வந்தது.

சுப்ரீம் கோர்ட் உத்தரவையடுத்து, கடந்த வாரத்தில், 51.46 கோடி ரூபாய் மதிப்பிலான இடம், சென்னை மாநகராட்சி வசம் வந்தது. இந்த இடத்தில், மெட்ரோ ரயில் நிலையம் அமைக்க திட்டமிட்டுள்ளதால், அந்த இடத்தை மெட்ரோ ரயில் நிர்வாகத்திடம், மாநகராட்சி ஒப்படைத்தது.

இதைத் தொடர்ந்து மெட்ரோ ரயில் நிர்வாகம், தனது பணியைத் துவக்கும் வகையில், மீட்கப்பட்ட இடத்திலுள்ள, பிரபலமான பிக்னிக் ஓட்டல் கட்டடத்தை இடிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. நேற்று ராட்சத பொக்லைன் இயந்திரம் மூலம் கட்டடம் இடித்துத் தள்ளப்பட்டது.

ஓரிரு நாட்களில் கட்டடம் முழுவதும் இடிக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்படும் என, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கட்டடம் இடிக்கப்பட்ட பின், அப்பகுதியில், மெட்ரோ ரயில் நிலையம் அமைவதற்காக ஆக்கப்பூர்வமான பணிகளை, மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இங்கு சுரங்கத்தில் மெட்ரோ ரயில் பாதை மற்றும் நிலையமும் அமைகிறது.

Daily Thanthi 6/11/11

மெட்ரோ ரெயில் பணிகளுக்காக

# பிக்னிக் ஓட்டலை இடித்து அகற்றும் பணி தீவிரம்

## 2 நாட்களில் முற்றிலும் அகற்றப்படும்

சென்னை, நவ.6–

மெட்ரோ ரெயில் பணிகளுக்காக பிக்னிக் ஓட்டலை இடித்து அகற்றும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இன்னும் 2 நாட்களில் கட்டிடம் முற்றிலும் அகற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கோர்ட்டு உத்தரவு

சென்னை மாநகராட்சி அருகே உள்ள விக்டோரியா பப்ளிக் ஹால் மற்றும் அதை சுற்றி உள்ள 56 கிரவுண்ட் நிலம் தனியார் அறக்கட்டளைக்கு 99 ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது. அந்த அறக்கட்டளையிடம் இருந்து உடுப்பியை சேர்ந்த ஒருவர் சுமார் 15 கிரவுண்ட் இடத்தை சப்–லீசுக்கு வாங்கி அதில் பிக்னிக் ஓட்டலை கட்டினார்.

குத்தகை காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து விக்டோரியா பப்ளிக் ஹால் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் பிக்னிக் ஓட்டல் நிர்வாகம் நிலத்தை ஒப்படைக்காமல் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இந்த நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வழக்கு மாநகராட்சிக்கு சாதகமாக முடிந்தது. மேலும் ஓட்டலை காலி செய்யும்படி கோர்ட்டு உத்தரவிட்டது.

### ஓட்டலை இடிக்கும் பணி தீவிரம்

இதையடுத்து, ஓட்டல் நிர்வாகம் ஓட்டலில் உள்ள பொருட்களை அப்புறப்படுத்த சில தினங்கள் அனுமதி கேட்டு பொருட்களை அப்புறப்படுத்தியது. விலை உயர்ந்த அலங்கார பொருட்கள் அனைத்தும் ஓட்டல் நிர்வாகத்தினர் எடுத்துச் சென்றனர். பிக்னிக் ஓட்டல் இருந்த இடம் மெட்ரோ ரெயில் பணிகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக ஓட்டலை இடிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தரை தளத்துடன் சேர்த்து மொத்தம் 3 தளங்களை கொண்ட இந்த ஓட்டலின் பின் பகுதியில் நட்சத்திர தங்கும் விடுதி வசதியும் செயல்பட்டது. இந்த கட்டிடத்தின் இடிப்பு பணிகள் இன்னும் 2 நாட்களில் முடிவடையும் என்றும், அதன் பின்னர் மெட்ரோல் ரெயில் திட்ட பணிகள் தொடங்கப்படும் என்று மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறினார்.



மெட்ரோ ரெயிலுக்காக சென்னையில் பிக்னிக் ஓட்டல் இடிக்கப்படுவதை படத்தில் காணலாம்.